| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 395/2012 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | வையாபுரி | நாள் | 08.11.2021 |
| தகப்பனார் பெயர் | குப்பண்ணக்கவுண்டர் | | |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எங்களுடைய குடும்பத்திற்கு வழக்கு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் ஆமாம். மணி என்பவரின் சொத்தை இவ்வழக்கில் சேர்த்துவிட்டதாக நான் கூறியுள்ளநிலையில் மேற்படி மணி தன்னுடைய சொத்து தான் எனக்கூறி வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 4ம் பிரதிவாதியின் வாரிசுகள் தான் 5 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் ஆமாம். மேற்படி அம்மாசி வகையறாவும், நாங்களும் சேர்ந்து தான் இவ்வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் இல்லை. யார் யார் நாங்கள் சேர்த்து இவ்வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் பரமகவுண்டர் மற்றும் மயிலி ஆகியோர் சேர்த்து நடத்தி வருகிறோம். 5முதல் 8 பிரதிவாதிகள் வழக்கறிஞர் வைத்து வழக்கை நடத்துகின்றனரா என்றால் இல்லை. வழக்கு சொத்து அய்யம்மாளின் தனிப்பட்ட சொத்து இல்லை என்றால் ஆமாம். உயில் எந்த தேதியில் எழுதியது என்பது எனக்கு தெரியுமா என்றால் 2005ல் எழுதியது. தேதி, மாதம் தெரியாது. எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் மதியம் 1.30மணிக்கு பதிவு செய்யப்பட்டது. சொத்துவிபரம் எந்த பத்திரத்தை பார்த்து எழுதப்பட்டது என்றால் பட்டா எண், சர்வே எண் வைத்தும், முன்சீப் எழுதிகொடுத்தது வைத்தும் சொத்துவிபரம் எழுதப்பட்டது. எவ்வளவு ரூபாய் முத்திரைத்தாள் என்றால் தெரியாது. நான் செல்லும்போதே என்னுடைய தாயார் எழுதி தயார் செய்து வைத்திருந்தார். சாட்சி கையொப்பம் போடுவதற்கு முன்பு படித்து காண்பித்தார்கள். அதன்பின்பு கையொப்பம் போட்டேன். அதனால் எத்தனை ரூபாய் பத்திரம், யாரிடம் எந்த தேதியில் வாங்கியது என்பது எனக்கு தெரியாது என்றால் எவ்வளவு ரூபாய் என்பது தெரியாது. ஆனால் தாரமங்கலம் பதிவு அலுவலகத்தில் வாங்கப்பட்டது. வாங்கும்போது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. நானும், என்னுடைய சகோதரி மற்றும் தாயாரும் சென்றோம். நாங்கள் செல்லும்போது காலை 10.30மணி இருக்கும். உயில் பத்திரம் யார் தட்டச்சு செய்தார் என்பது தெரியுமா என்றால் ஓமலூர் வட்டம், வேடப்பட்டியை சார்ந்த கணேசன் என்பவர் தட்டச்சு செய்தார். கணேசனுக்கு யார் வாசகங்களை கூறினார்கள் என்றால் லீஸ்

பட்டாவை கொடுத்தார். அவர் தயார் செய்து கொடுத்தார். நானோ, மற்றொரு சாட்சியோ வாசகங்களை கூறவில்லை என்றால் நான் கூறவில்லை. மற்றொரு சாட்சி கூறினார். அப்போது நான் உடன் இருந்தேனா என்றால் உடன் இருந்தேன். மற்றொரு மகன் பழனியப்பன் இருக்கிறார் எனவும், அவரை வைத்து எழுதி கொள்ளலாம் என நான் கூறவில்லையா என்றால் நான் கூறவில்லை. அவர்களும் பழனியப்பனை கேட்கவில்லை. மயிலியின் கணவர் பெயர் சங்கையன். பி.வா.சா.ஆ.1–ல் குப்பண்ணக்கவுண்ரின் மனைவி மயிலிக்கு எழுதிவைப்பதாக கூறியிருந்தார் என குறிப்பிட்டிருந்தால் அது தவறா என்றால் குப்பண்ணக்கவுண்டரின் மனைவி பெயர் அய்யம்மாள். குப்பண்ணகவுண்டரின் மனைவி மயிலியா என்றால் இல்லை மகள். அதில் மனைவி பெயர் குறிப்பிட்டுள்ளதை நான் பார்க்கவில்லையா என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1ல் அய்யம்மாளுக்கு சொத்து எந்த வகையில் பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை. பி.வா.சா.ஆ.1 குறித்து பழனியப்பனுக்கு தெரியாது என்றால் நான் அழைக்கவில்லை. என்னுடைய தாயார் அவரிடம் கூறியதாகவும், பழனியப்பன் வருவதாகவும் தெரிவித்தார். பழனியப்பன் வரவில்லையா என்றால் ஆமாம். பழனியப்பன் வந்ததற்கு பின்னிட்டு எழுதிகொள்ளலாம் என நானும் கூறவில்லை, என்னுடைய தாயாரும் கூறவில்லை மற்றும் சாட்சியும் கூறவில்லையா என்றால் கேட்கவில்லை. பி.வா.சா.ஆ.1ல் எந்த சர்வே எண்ணில் எவ்வளவு ஹெக்டேர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் ஹெக்டேர் அளவு தெரியாது. 65 செனட். எவ்வளவு ஏக்கர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 65 செனட். சாட்சி தற்போது எவ்வளவு ஏக்கர் என குறிப்பிடப்படவில்லை என சாட்சியம் அளிக்கிறார். பி.வா.சா.ஆ.1 எத்தனை பக்கங்கள் உள்ளது என்றால் எண்ணிப்பார்க்கவில்லை. பி.வா.சா.ஆ.1ல் அய்யம்மாளுக்கு எந்த வகையில் பாத்தியம் என குறிப்பிடவில்லை எனவும், உரிமையில்லாத சொத்தை எழுதிவைக்க அய்யம்மாளுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் ஒவ்வொருவருக்கும் அந்த சமயத்தில் ஓட்டிக்கொள்ள கொடுத்தபோது ஜீவனாம்சத்திற்கு எவ்வளவு சொத்துக்கள் என்னுடைய தாயாருக்கு கொடுத்தார்கள் என்றால் என்னுடைய பெற்றோர்களுக்கு 65 செனட் ஒதுக்கிகொண்டார்கள். நான் கூறுவது தவறு எனவும், என்னுடைய தகப்பனாருக்கு தொகை

ஒதுக்கிகொண்டதாகவும், என்னுடைய தாயார் ஆயுட்காலம்வரை அந்த சொத்தை அனுபவித்து வந்து அவருக்கு பின்னிட்டு எனக்கும், வாதிக்கும் கிடைக்கதக்கது என கூறினார் என்றால் இல்லை. நான் கூறுவது தவறு எனவும், என்னுடைய தகப்பனார் மேற்கண்டவாறு தான் செய்தார் எனவும், அதை தான் வாதி தன்னுடைய வழக்கில் கூறியுள்ளார் எனவும், அதனை தான் நான் பாகம் ஏற்பட்டுள்ளதாக வாதியே கூறிவிட்டார் என தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 வாதிக்கு தெரியாமலும், என்னுடைய தாயாருக்கு தெரியாமலும், நானும், மயிலியும், கம்யூனிஸ்ட்டு கட்சியை சார்ந்த ஆறுமுகமும் சேர்த்து உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் பெயரில் உள்ள பட்டாவை ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தாயார் பெயரில் உள்ளதாக கூறும் பட்டாவின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. முன்சீப் எழுதிகொடுத்ததாக கூறுவதை ஒப்படைக்கவில்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 ல் பட்டா எண் உள்ளதா என்றால் உள்ளது. அதில் பட்டா எண் போடப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. பி.வா.சா.ஆ.1 ல் பட்டா எண் குறிப்பிடவில்லை எனவும், நாங்கள் உருவாக்கியதால் தான் பட்டா எண் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் படித்துள்ளாரா என்றால் இல்லை. உயில் எழுதியதற்கு என்னுடைய தாயார் சங்கதிகளை கூறினார் என நான் கூறுவது பொய் எனவும், நானும், ஆறுமுகமும் சேர்ந்து உயிலை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 எந்த காலத்திலேயும் அமுலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் பெயரில் கட்டியுள்ளதாக கூறும் கந்தாய ரசீதை ஒப்படைத்துள்ளேனா என்றால் 15 வருடங்களாக கந்தாயம் வசூல் செய்யவில்லை. என்னுடைய தாயார் பெயரில் உள்ள ரசீதுகளையும் ஒப்படைக்கவில்லை. என்னுடைய தாயார் எந்த தேதியில் இறந்தார் என்றால் 10 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். தேதி தெரியாது. இறக்கும் போது அவருடைய வயது என்னவென்றால் 85 வருடத்திற்கு மேல் இருக்கும். உயில் எழுதி 7 வருடங்களுக்கு பின்னிட்டு இறந்துவிட்டார். அய்யம்மாளின் வாரிசு சான்றிதழ் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. மயிலி எந்த தேதியில் சுவாதீனம் எடுத்துக் கொண்டதாக நான் கூறியுள்ளேன் என்றால் என்னுடைய தாயார் இறப்பதற்கு முன்பு மயிலியும், தாயாரும் இருவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எழுதிவைத்ததிலிருந்து

மயிலி பார்த்து வருகிறார். நான் கூறுவது தவறு எனவும், மயிலி பெயரில் எவ்வித பட்டாவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மயிலி பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டாவே வாங்கவில்லை. பட்டாவை மயிலி பெயருக்கு மாற்ற மனு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மயிலியும் என்னுடைய கட்டுப்பாட்டில் உள்ளார் என்றால் ஆமாம். சொத்து குறித்த பட்டா, அடங்கல், சிட்டா ஆகியவை யாருடைய பெயரில் உள்ளது என்றால் பட்டா இல்லை. அடங்கல், சிட்டா ஆகியவை பாட்டன் பெயரில் இருந்தது. அதன்பின்னர் என்னுடைய தகப்பனார் பெயருக்கு வந்தது. தற்போதுவரை மயிலி சொத்தை சுவாதீனம் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அமுலுக்கு வராத உயிலை வைத்து கிரையம் செய்துகொண்டதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. மயிலிக்கு உயில் மூலமாக வந்த சொத்தை கிரையம் வாங்கியதாக நான் கூறியுள்ளேனா என்றால் ஆவணத்தையே தாக்கல் செய்துள்ளேன். யார் யார் பெயரில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் என் பெயரிலும், என்னுடைய மகன் பெயரிலும் கிரையம் பெற்றுள்ளேன். மயிலியிடமிருந்து கிரையம் பெற்றேன். அந்த கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எவ்வளவு தொகைக்கு பத்திரம் வாங்கினேன் என்றால் மகன் தான் வாங்கினான். எனக்கு தெரியாது. எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றேன் என்றால் ரூ.1 லட்சத்தி 9 ஆயிரத்திற்கு கிரையம் பெற்றோம். அந்த பத்திரம் காலை 11.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. யார் எழுதினார்கள் என்றால் கணேசன் என்பவர் எழுதினார். சாட்சி தற்போது பெயர் தெரியாது என சாட்சியம் அளிக்கிறார். யார் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் தெரியவில்லை. மயிலிக்கு ரூபாய் 1 லட்சத்தி 9 ஆயிரம் வழங்கியதாக கூறுகிறேன் என்றால் ஆமாம். அந்த பத்திரத்திலும் அவ்வாறு தான் எழுதப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு தான் எழுதியிருக்கும். என்னுடைய தாயார் இறந்து எத்தனை நாட்கள் கழித்து எழுதப்பட்டது என்றால் ஓரிரு மாதங்கள் இருக்கும். ஒரு மாதம் கழித்து எழுதப்பட்டது. மயிலியின் பெயரில் உள்ள பட்டாவை வைத்து அந்த கிரையப்பத்திரம் எழுதப்பட்டதா என்றால் மயிலிக்கு பட்டாவே வரவில்லை. அந்த கிரையப்பத்திரத்தில் என்ன பட்டா எண் கொடுக்கப்பட்டது என்றால் எழுதியதை பார்க்கவில்லை. 17.06.2012 ல் என்னுடைய தாயார் இறந்து ஒரு மாதம் கூட ஆகாத

நிலையில் 11.07.2012 ல் நானும், என்னுடைய மகனும், சாட்சி கையொப்பமிட்டவர்களும் சேர்ந்து மயிலியை ஏமாற்றி எழுதி வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. மயிலிக்கு ஒரு நயாபைசா கூட கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மயிலியை நாங்கள் விசாரிக்க உள்ளோமா என்றால் இல்லை. மயிலியை விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதற்காக தான் மயிலியை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. போலியாக பத்திரம் ஏற்பட்டுள்ளதால் தான் அந்த பத்திரத்தை கூட தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரையம் பெற்றவுடன் உடனடியாக விஸ்டர் பைனான்ஸிடம் 2017 ல் பணம் பெற்றுள்ளோம் என்றால் ஆமாம். விஸ்டர் பைனான்ஸ் நிறுவனத்திடம் வழக்கு நடப்பது குறித்து கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். பத்திரத்தை அனுசரித்து பட்டா பெற்றுள்ளோமா என்றால் இல்லை. போலியாக பத்திரத்தை தயாரித்ததால் தான் வில்லங்கத்தில் வரவேண்டும் என்பதற்காக விஸ்டர் பைனான்ஸில் வழக்கு நிலுவையின்போது கடன் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. எந்த சர்வே எண்ணில் நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீது சொத்து உள்ளது என்றால் சர்வே எண் தெரியாது. பி.வா.சா.ஆ.3 மயிலியிடம் வாங்கிய சொத்திற்குரியது அல்ல என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 வீட்டிற்கு உரியது என்றால் ஆமாம். ராஜாத்தி என்னுடைய தம்பி மகள். அதாவது பழனியப்பனின் மகள் என்றால் ஆமாம். விற்றதாக கூறும் சொத்து தற்போது வரை பழனியப்பனின் சுவாதீனத்தில் தான் உள்ளது என்றால் ஆமாம். அதில் எவ்வளவு சொத்து எழுதப்பட்டுள்ளது என்றால் 20 சென்ட். சர்வே எண் தெரியாது. நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய தகப்பனார் அந்த சமயத்தில் எவ்வாறு அனுபவிக்க ஏற்பாடு செய்தாரோ அதன்படி தான் அனுபவித்து வருகிறோம் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.6 குடும்ப சூழ்நிலை காரணமாக பெயரளவிற்கு வாதி பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. மொத்த குடும்ப சொத்தை இரண்டாக பிரிப்பதற்கு எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் எனக்கு ஆட்சேபணை இல்லை. வாதி கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.